கனடா பாதுகாப்பு அமைச்சர் அனிதா ஆனந்துக்கு ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, அக்.29–

கனடா நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அனிதா ஆனந்துக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:–

"தமிழ் மரபைச் சேர்ந்தவரும் முன்னாள் சட்டப் பேராசிரியருமான அனிதா ஆனந்த் பெருந்தொற்றுக் காலத்தில்கனடாநாட்டின்கொள்முதல் துறை அமைச்சராகப் பாராட்டத்தக்க முறையில் பணியாற்றியதைத் தொடர்ந்து, தற்போது அந்நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை அறிந்து மகிழ்கிறேன். தமது புதிய பணியிலும் அவர் சிறப்பாகச் செயல்பட எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

ரிசர்வ் வங்கி ஆளுநரின் பதவிக் காலம் நீட்டிப்பு

டெல்லி, அக். 29–

ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸின் பதவிக்காலம் மேலும் மூன்றாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த சக்திகாந்த தாஸ், 1980 ஆம் ஆண்டு ஐஏஎஸ் ஆன பிறகு, தமிழ்நாடு அரசின் வருவாய்த்துறை ஆணையர், தொழில்துறைச் செயலாளர், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் எனப் பதவிகளை வகித்தவர். பின்பு, ஒன்றிய அரசின் பொருளாதார விவகாரத்துறை முன்னாள் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

இதையடுத்து, ரிசர்வ் வங்கியின் ஆளுநராக கடந்த 2018ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். இவருடைய பதவிக்காலம் டிசம்பர் 10ஆம் தேதியுடன் முடிவடையவுள்ள நிலையில், பிரதமர் மோடி, ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோர் அடங்கிய அமைச்சரவை நியமனக் குழு, "ரிசர்வ் வங்கியின் ஆளுநராக சக்தி காந்த தாஸ் டிசம்பர் 10ஆம் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு அல்லது அடுத்த உத்தரவு வரும் வரை, மறுநியமனம் செய்யப்படுகிறார்" என்று அறிவித்தது.

பாஜக ஆட்சியில் ஆளுநராக இருந்த ரகுராம் ராஜன், ஒருமுறை மட்டுமே ரிசர்வ் வங்கியின் ஆளுநராக இருந்துள்ளார். அவரைத் தொடர்ந்து நியமிக்கப்பட்ட உர்ஜித் படேல் முதல் பதவிக்காலத்தின் பாதியிலேயே திடீரென ராஜினாமா செய்தார். இதையடுத்துதான், ரிசர்வ் வங்கியின் ஆளுநராக சக்தி காந்த தாஸ் நியமிக்கப்பட்டார். அந்தவகையில் இவர் ஒருவர்தான் மறுநியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மீன் வளர்ச்சி கழக தலைவராக கௌதமன் நியமனம்: ஸ்டாலின் உத்தரவு

சென்னை, அக்.29–

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் தலைவராக ந. கௌதமனை நியமித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார்.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 1974–ம் ஆண்டு கருணாநிதியால் மீனவர்களின் மேம்பாட்டிற்காகத் தொடங்கப்பட்டு, இயங்கி வருகிறது. இக்கழகம் சாத்தனூர், பவானிசாகர், ஆழியார், அமராவதி, திருமூர்த்தி மற்றும் உப்பார் நீர்த்தேக்கங்களில் மீன்வள மேலாண்மையையும், மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்யும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. அதோடு மட்டுமல்லாமல், சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் நடமாடும் கடல் மீன் உணவகங்கள், மதிப்புக் கூட்டப்பட்ட மீன் உணவு தயாரிப்புகள் உற்பத்தி மற்றும் விற்பனைக்காக சென்னை ராயபுரத்தில் பயிற்சி மைய வசதி, சேத்துப்பட்டில் அமைந்துள்ள மீன்பிடி விளையாட்டுடன் கூடிய பசுமைப் பூங்கா பராமரிப்பு மேலாண்மை உள்ளிட்ட முக்கியப் பணிகளையும் நிர்வகித்து வருகிறது. இக்கழகத்தின் தலைவராக ந.கௌதமனை நியமித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார்.

ந. கௌதமன் நாகை மாவட்டம் அக்கரைப்பேட்டை மீனவர் கிராமத்தில் பிறந்தவர். கடந்த 25 ஆண்டுகளாக மீனவ கிராமங்களில் மீனவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு கண்டவர். தமிழக மீனவர்கள் பிரச்சினைகளைக் களையும் பொருட்டு, அரசு தரப்பில் அமைத்த குழுவில் இவர் இடம் பெற்று, இலங்கை சென்று அங்கு நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டு பிரச்சினைகளுக்கு சுமூகத் தீர்வு கண்டவர். மேலும், இவர் 2006–ம் ஆண்டு நாகை நகர் மன்ற உறுப்பினராகவும் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டம்

இல்லம் தேடிக் கல்வி திட்டத்தில் சேவை செய்ய 86,550 பேர் பதிவு: முதல்வர் ஸ்டாலின் மகிழ்ச்சி

1 லட்சம் மாணவர்களை அரசு பள்ளியில் கூடுதலாக சேர்ப்போம்

சென்னை, அக்.29–

இல்லம் தேடிக் கல்வி திட்டத்தில் சேவை செய்ய 86 ஆயிரத்து 550 தன்னார்வலர்கள் பதிவு செய்திருக்கிறார்கள் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

மானுடம் இதுவரை சந்தித்திராத ஒரு பெருந்தொற்றிலிருந்து படிப்படியாக மீண்டு வருகிறோம். இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில் அதிக இழப்பைச் சந்தித்தவர்கள் பள்ளிக் குழந்தைகளே. பெருந்தொற்றால் பள்ளிகள் மூடப்பட்டதன் காரணமாக, மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள கற்றல் இழப்பை ஆய்வு செய்த கல்வியாளர்களும், யுனெஸ்கோ உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புகளும், தமிழ்நாடு அரசின் பொருளாதார ஆலோசனைக் குழுவிலுள்ள வல்லுனர்களும் அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறை மூலமாக, முழுவதும் மாநில அரசின் நிதியில் செயல்படுத்த இருக்கும் "இல்லம் தேடிக் கல்வி" திட்டம் நேற்று முன்தினம் (27–ந் தேதி) தொடங்கப்பட்டுள்ளது.

இல்லம் தேடிக் கல்வித் திட்டம் மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும் சிறப்பான வரவேற்பைப் பெற்று வருகிறது. பள்ளிகள் பல மாதங்களாக மூடப்பட்டிருந்த நிலையில் ஏற்பட்டுள்ள கற்றல் பாதிப்பினைக் குறைக்கவும், சரிசெய்யவும், வேறு எந்த மாநிலமும், எந்தவொரு திட்டத்தினையும் செயல்படுத்தாத நிலையில், ஒரு முன்னோடித் திட்டமாக மாணவச் செல்வங்களும், அவர் தம் பெற்றோர்களும் எளிதில் அணுகிப் பெறும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சேவை செய்ய 86,550 பேர் பதிவு

இத்திட்டத்தில் தங்களை இணைத்துக்கொண்டு மாணவர்களின் கல்வியினை மேம்படுத்துவதில் ஆர்வம் கொண்டவர்களைத் தன்னார்வலர்களாகத் தேர்வு செய்து, அவர்களுக்கு உரிய பயிற்சி வழங்கி இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதுவரை 67 ஆயிரத்து 961 பெண்களும், 18 ஆயிரத்து 557 ஆண்களும், 32 திருநங்கையரும் என மொத்தம் 86 ஆயிரத்து 550 நபர்கள் இத்திட்டத்தில் சேவையாற்ற பதிவு செய்துள்ளனர்.

இவ்வாறு பதிவு செய்தவர்களின் கல்வித்தகுதி, இருப்பிடம், முன் அனுபவம் போன்ற பல்வேறு அளவீடுகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட பள்ளி மேலாண்மைக் குழுக்கள் மூலம் நேரடியாகத் தேர்வு செய்யப்படுவர். இந்தப் பள்ளி மேலாண்மைக் குழுவில் பள்ளித் தலைமையாசிரியர், ஆசிரியர்கள், பெற்றோர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் இடம் பெறுவர். தேர்ந்தெடுக்கப்படும் தன்னார்வலர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

மாணவர்களின் எதிர்கால நலன் கருதி, கொரோனா பெருந்தொற்றால், கடந்த 19 மாத காலத்தில், கற்றலில் ஏற்பட்ட இழப்பைச் சரிசெய்யும் பெரும்பணியில் ஈடுபடவிருக்கும் ஆசிரியர்களுக்கு உறுதுணையாக விளங்கும் வகையிலேயே இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆனால், இத்திட்டம் குறித்து ஊடகங்கள் வாயிலாக சில மாற்றுக் கருத்துகள் அரசின் கவனத்திற்குத் தெரிய வந்துள்ளது. அவற்றை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ளது. தன்னார்வலர்களைத் தேர்வு செய்யும் முறை, அவர்களுடைய பங்களிப்பு, அவர்களால் கற்பிக்கப்படும் மாணவ மாணவியரின் கற்றல் மேம்பாடு ஆகியவை தொடர்ந்து கல்வியாளர்கள் கொண்ட குழுவால் கண்காணிக்கப்படும். அரசின் வழிகாட்டுதல்களை முறையாகக் கடைபிடிப்பவர்கள் மட்டுமே தன்னார்வலர்களாகத் தொடர அனுமதிக்கப்படுவர்.

1 லட்சம் மாணவர்களை சேர்ப்போம்

இதுமட்டுமல்ல; இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தின் வாயிலாக தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு இல்லத்திற்கும் நேரடியாகச் சென்று பள்ளி செல்லும் வயதுள்ள குழந்தைகள் அனைவரும் தொடர்ந்து பள்ளிக்கு வருவது உறுதி செய்யப்படும். மேலும், வருகிற கல்வியாண்டில் குறைந்தபட்சம் ஒரு லட்சம் மாணவர்கள் அரசுப் பள்ளிகளில் கூடுதலாகச் சேர்க்கப்பட வேண்டும் என்பதையும் இலக்காகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியிருக்கும் புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப் போவதில்லை என்பது ஏற்கெனவே பலமுறை தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. மேலும், மாநில அளவிலான கல்விக் கொள்கையினை வகுத்திட கல்வியாளர் அடங்கிய குழு ஒன்று விரைவில் அமைக்கப்படும்.

மாணவர்களின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு, தன்னார்வலர்கள் அரசுப் பள்ளிகளின் நல்லெண்ணத் தூதுவர்களாக, ஆசிரியர்களுக்கும், பள்ளிகளுக்கும், சமூகத்திற்கும் இணைப்புப் பாலமாகச் செயல்படுவர். எனவே, இத்திட்டத்தின் நோக்கத்தினைப் புரிந்துகொண்டு, அனைத்துத் தரப்பு மக்களும், இத்திட்டத்தினை ஆதரித்து, நம் மாணவச் செல்வங்களின் எதிர்காலத்திற்கு உதவிடும் வகையில், அரசுப் பள்ளிகளை வலுப்படுத்திட கைகோத்திட வேண்டும். இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

முறையான வழிகாட்டுதல்படி முல்லைப் பெரியாறு அணை இயக்கம்: அமைச்சர் துரைமுருகன் தகவல்

சென்னை, அக்.29–

உச்ச நீதிமன்றம், முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி வரையில் நீரை தேக்கிவைக்க வழங்கிய ஆணையின்படியும், மத்திய நீர்வளக் குழுமம் ஒப்புதல் அளித்தவாறு நிர்ணயிக்கப்பட்ட மாதவாரியான அணையின் நீர்மட்ட அட்டவணைப்படியும் முல்லைப் பெரியாறு அணைக்கு வரும் நீர், தேக்கப்படும் நீர், மழைப் பொழிவு ஆகியவைகளை தொடர்ந்து தமிழ்நாடு கண்காணித்து வருகிறது என்று அமைச்சர் துரைமுருகன் கூறியுள்ளார்.

கேரளாவைச் சார்ந்த தனிநபர் ஒருவர் தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் 28.10.2021 அன்று தமிழ்நாட்டின் வாதங்களை கேட்ட பின், 11.11.2021 அன்று மீண்டும் விசாரணைக்கு வரும்வரை, மத்திய நீர்வளக் குழுமம் ஒப்புதல் அளித்துள்ள நிர்ணயிக்கப்பட்ட நீர்மட்ட அட்டவணையை பின்பற்றுமாறு ஆணையிட்டுள்ளது. தமிழ்நாடு, நிர்ணயிக்கப்பட்ட அட்டவணையின் படியே நீர்மட்டத்தை பராமரிப்பதற்காக, வைகை அணைக்கு தொடர்ந்து நீரை குகைபாதை வழியாக கடத்துகிறது.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பொழிவதாலும், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவதாலும், தமிழ்நாடு அரசின் நீர்வள ஆதாரத் துறை எடுத்த முடிவின்படி, வைகை அணைக்கு குகைபாதை வழியாக அதிகபட்சமாக வெளியேற்றப்படும் நீரோடு, கேரள அதிகாரிகளுக்கு உரிய காலத்தில் முன்னெச்சரிக்கை, அறிவிப்பு அளித்தபின் இன்று காலை 7.30 மணிக்கு முல்லைப் பெரியாறு அணையின் இரு வழிந்தோடி மதகுகளை திறந்து வினாடிக்கு 500 கனஅடி வீதம் நீரை வெளியேற்றி வருகிறது. இது, மத்திய நீர்வளக் குழுமம் ஒப்புதல் அளித்துள்ள நிர்ணயிக்கப்பட்ட மாதவாரியான அணையின் நீர்மட்ட அட்டவணையை பின்பற்றியே செய்யப்படுகிறது.

முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பாக உள்ளது. மத்திய நீர்வளக் குழுமம் ஒப்புதல் அளித்துள்ள நிர்ணயிக்கப்பட்ட மாதவாரியான அணையின் நீர்மட்ட அட்டவணைப்படி தமிழ்நாடு அரசின் நீர்வள ஆதாரத் துறை, அணையினை கவனமாக இயக்கி வருகிறது. இதற்கு புறம்பாக வரும் எந்த தகவலும் உண்மையானவை அல்ல என்பதால் அவை புறக்கணிக்கப்பட வேண்டியவை ஆகும். தமிழ்நாட்டுக்கு சொந்தமான முல்லைப்பெரியாறு அணை, நிலையான வழிகாட்டுதல்களின்படி முறையாக இயக்கப்பட்டு வருகிறது என்பது மீண்டும் வலியுறுத்தப்படுகிறது.

பவானி அருகே

கார் – லாரி நேருக்கு நேர் மோதல்: அரசு மருத்துவர் உள்பட 3 பேர் பலி

பவானி, அக். 29–

பவானி அருகே கார் – லாரி நேருக்கு நேர் மோதிய விபத்தில் அரசு மருத்துவர் உள்பட 3 பேர் உயிரிழந்தனர்.

சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டம் மேச்சேரி உடையானூரை சேர்ந்தவர் தேவநாதன் (வயது 53). தனியார் நிறுவன மேலாளர். இவரது மனைவி இந்திராணி (வயது 51). மேட்டூரை அடுத்த வனவாசி அரசு ஆரம்ப சுகாதார மருத்துவராக பணியாற்றி வந்துள்ளார். மேட்டூரின் மேச்சேரி பகுதியில் குலாலர் வீதியில் சுப்பிரமணியம் நகரை சேர்ந்தவர் ராஜாமணி மகன் சத்தியசீலன் (வயது 24). இவர், தேவநாதன் வேலை செய்யும் நிறுவனத்தில் பணியாற்றியுள்ளார்.

தேவநாதனும், இந்திராணியும் கோவையில் உள்ள மருத்துவமனைக்கு காரில் சென்றனர். அவர்களுடன் சத்தியசீலனையும் அழைத்து சென்றுள்ளனர். இவர்கள் மூன்று பேரும் நேற்றிரவு கோவையிலிருந்து மேட்டூர் திரும்பி கொண்டிருந்தனர். காரை தேவநாதன் ஓட்டி சென்றார். பவானி மேட்டூர் சாலையில் காடப்பநல்லூர் பிரிவு அருகே சென்றபோது, மேட்டூரிலிருந்து பவானி நோக்கி வந்த லாரியும் காரும் எதிர்பாராமல் நேருக்கு நேர் மோதி கொண்டன. இதனை கண்ட அப்பகுதியினர் விரைந்து சென்று இடிபாடுகளுக்குள்சிக்கியிருந்த மூன்று பேரையும் மீட்க முயன்றனர். ஆனால் முடியவில்லை. இதைத் தொடர்ந்து பவானி தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த தீயணைப்பு படையினர், பவானி போலீசார் சுமார் ஒரு மணி நேரம் போராடி, இடிபாடுகளுக்குள் சிக்கிய 3 பேரையும் மீட்டனர். பரிசோதனையில் அவர்கள் ஏற்கனவே உயிரிழந்தது தெரிய வந்தது.

இதுகுறித்து, பவானி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

'பேஸ்புக்' பங்குகள் 'மெட்டா' என பெயர் மாற்றம்: மார்க் ஜூக்கர் பெர்க் தகவல்

நியூயார்க், அக். 29–

சமூக வலைத்தள நிறுவனமான பேஸ்புக்கின் பெயர், மெட்டா (Meta) என மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அதன் தலைமை செயல் அதிகாரி மார்க் ஜூக்கர்பெர்க் அறிவித்துள்ளார்.

சமூக ஊடக நிறுவனமான பேஸ்புக்கின் பெயர் விரைவில் மாற்றப்பட இருப்பதாக கடந்த சில நாட்களாக செய்திகள் வெளியாகி வந்தன. இந்நிலையில், நியூயார்க்கில் நடைபெற்ற 'பேஸ்புக்' ஆண்டு கூட்டத்தின்போது, பேசிய அதன் தலைமை செயல் அதிகாரி மார்க் ஜூக்கர்பெர்க் , பேஸ்புக் நிறுவனத்தின் பெயரை 'மெட்டா' என மாற்றி உள்ளதாகத் தெரிவித்தார்.

பெயர் மட்டுமே மாற்றம்

'சமூக பிரச்னைகளுடன் போராடி நிறைய கற்றுக் கொண்டதாகவும், அது அனைத்தையும் கொண்டு புதிய அத்தியாயத்தை உருவாக்கி இருப்பதாகவும் தெரிவித்தார். தற்போது நிறுவனத்தின் பெயர் மட்டுமே மாற்றப்பட்டுள்ளதாகவும், தங்கள் 'ஆப்'களும், அவற்றின் பிராண்டுகளும் மாறவில்லை எனவும், மார்க் ஜூக்கர்பெர்க் தெரிவித்துள்ளார்

மெய்நிகர் ஆன்லைன் உலகமான 'மெட்டாவெர்ஸ்' நோக்கி, பேஸ்புக் நிறுவனம் தன்னுடைய கவனத்தை செலுத்தி வருவதாகவும், அதனை பிரதிபலிக்கும் வகையில், நிறுவனத்தின் பெயரை மெட்டா என மாற்றியுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

38 மாவட்ட தொழில் மையங்களில் பொது மேலாளர்களுடன் திறனாய்வு

புதிய 5 கண்டுபிடிப்பாளர்களுக்கு ரூ.9½ லட்சம் மான்ய உதவித் தொகை; 34 பேர் சுயதொழில் தொடங்க ரூ.2½ கோடி மான்யத்துடன் கடன் உதவி

அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்

சென்னை, அக்.29–

ஊரகத் தொழில்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் இன்று (29–ந் தேதி) சென்னை கிண்டியில் சிட்கோ அலுவலக கூட்ட அரங்கில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வரும் சுயவேலைவாய்ப்பு கடன் திட்டங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான முதலீட்டு மானியம் உள்ளிட்ட பல்வேறு மானிய திட்டங்கள் மற்றும் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகள் குறித்து 38 மாவட்ட தொழில் மையங்களின் பொது மேலாளர்கள் திறனாய்வு கூட்டம் நடைபெற்றது.

ஊரகத் தொழில்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தமிழ்நாடு தொழில் முனைவோர் தொழில் மேம்பாட்டு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் மூலம் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்த செயல்படுத்தப்படும் புத்தாக்க பற்றுச்சீட்டு திட்டத்தின் கீழ் புதிய 5 கண்டுபிடிப்பாளர்களுக்கு ரூ.9.33 லட்சம் மானிய உதவித் தொகையாகவும், சுயவேலைவாய்ப்பு திட்டங்களின் கீழ் 34 பயனாளிகளுக்கு ரூ.14.44 கோடி திட்ட மதிப்பீட்டில் தொழில் தொடங்க ரூ.2.57 கோடி மானியத்துடன் கடன் உதவியும், முதலீட்டு மானிய திட்டத்தின் கீழ் 5 நிறுவனங்களுக்கு ரூ.1.09 கோடி மானியம் வழங்குவதற்கான ஆணைகளையும் வழங்கினார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கூறியதாவது:–

மாவட்ட தொழில் மையங்களின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம், வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஆகிய சுயவேலைவாய்ப்பு திட்டங்களின் கீழ் நடப்பாண்டில் (2021–22) இதுவரை 2 ஆயிரத்து 912 பயனாளிகளுக்கு ரூ.107.50 கோடி மானியத்துடன் ரூ.352.93 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு முதலீட்டு மானியம், மின் மானியம், பின்முனை வட்டி மானியம் மற்றும் மின்னாக்கி மானியம் உள்ளிட்ட பல்வேறு மானியத் திட்டங்கள் இத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிதியாண்டில் இதுவரை 2 ஆயிரத்து 868 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ரூ.173.72 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மின்சார வாகனங்கள் மற்றும் சார்ஜிங் நிலையங்களை கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும், வாகன டெலிமேட்டிக்ஸ் உருவாக்கிய பிரப்ஜோத் கவுருக்கு ரூ.2.50 லட்சமும், இணைய பாதுகாப்பு மின்பொருள் தளம் அமைத்த சித்தார்தனுக்கு ரூ.2.50 லட்சமும், வெப்ப உப்பு நீக்கி முறை மூலம் உப்பு நீரை குடிநீராக சுத்திகரிக்கும் கருவியை உருவாக்கிய பிரித்திவ்ராஜனுக்கு ரூ.2.37 லட்சமும், விர்ச்சுவல் ரியாலிட்டியை பயன்படுத்தி நோயாளி தொலைதூரத்தில் இருக்கும் போதே மருத்துவரால் இணையதளத்தை உபயோகப்படுத்தி கண்களை பரிசோதிக்கும் கருவியை உருவாக்கிய மகேஸ்வரி சினிவாசனுக்கு ரூ.1 லட்சமும் , லேத் ஆப்செட் மூலம் மிக எளிமையான முறையில் துளையிட உதவும் கருவி உருவாக்கிய அருணா ராணிக்கு ரூ96 ஆயிரமும், 5 கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் ஆராய்ச்சி பணிக்கும், சந்தைப்படுத்தலுக்கும் தமிழ்நாடு அரசின் முதல் தவணை நிதியுதவியாக ரூ.9.33 லட்சம் இன்றைய தினம் வழங்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தின் கீழ் இதுவரை 161 கண்டுபிடிப்பாளர்களுக்கு ரூ. 4.19 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் வி.அருண்ராய், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் சிஜி தாமஸ் வைத்யன், சிறப்புச் செயலர் மகேஸ்வரி, கூடுதல் ஆணையர் கிரேஸ்லால் ரின்டிக்கி பச்சாவ் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஈசாப் இந்தியா லிமிடெட்

CIN:L29299TN1987PLC058738

பதிவு அலுவலகம் : பிளாட் எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.
தொ.பேசி எண். 044-4228 1100, இ-மெயில்: investor.relations@esab.co.in

ESAB

செப்டம்பர் 30, 2021 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்.

ரூ. லட்சங்களில் (EPS தவிர)

வ.எண்	விவரங்கள்	முடிவடைந்த காலாண்டு செப்டம்பர் 30, 2021 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த காலாண்டு ஜூன் 30, 2021 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த காலாண்டு செப்டம்பர் 30, 2020 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த ஆறு மாதங்கள் செப்டம்பர் 30, 2021 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த ஆறு மாதங்கள் செப்டம்பர் 30, 2020 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த ஆண்டு மார்ச் 31, 2021 (தணிக்கை செய்யப்பட்டது)
1	மொத்த செயல்பாடுகள் மூலம் வருமானம்	22,386	18,314	16,957	40,700	29,687	69,234
2	இக்காலத்திற்கான நிகர லாபம் (வரிக்கு முன். சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்)	3,193	2,718	2,384	5,911	3,340	8,053
3	இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்)	3,193	2,718	2,384	5,911	3,340	8,053
4	இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்)	2,366	2,035	1,769	4,401	2,486	5,929
5	இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)]	2,366	2,035	1,763	4,401	2,473	5,847
6	சமபங்கு மூலதனம்	1,539	1,539	1,539	1,539	1,539	1,539
7	பங்கு விகித ஈட்டுத்தொகை (ஒவ்வொரு பங்கு ரூ.10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்)						
	அ) அடிப்படை	15.37	13.22	11.49	28.60	16.15	38.52
	ஆ) குறைமதிப்பு	15.37	13.22	11.49	28.60	16.15	38.52

குறிப்பு :

1. மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள செப்டம்பர் 30, 2021-ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும். காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் கம்பெனியின் www.esabindia.com என்ற இணையதளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனத்தின் BSE Limited மற்றும் NSE India Limited என்ற இணையதளத்திலும் காணலாம்.

சென்னை
அக்டோபர் 28, 2021

"We Shape the Future"
Visit our website : http://www.esabindia.com

ஈசாப் இந்தியா லிமிடெட்டுக்காக
ரோஹித் கம்பீர்
மேலாண்மை இயக்குனர்